Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 3 No.2 2022 (34-46)

# மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பு.

## Correlation Between Reading Habit and Reading Skill Among Students

**Nivahshini Rajandran**[1]
Faculty of Language and Communication,
Sultan Idris Educational University, Tanjong Malim, Perak, MALAYSIA
D089924@siswa.upsi.edu.my

**Kingston Pal Thamburaj**[2]
Faculty of Language and Communication,
Sultan Idris Educational University, Tanjong Malim, Perak, MALAYSIA
fkingston@gmail.com

**R. Ravi**[3]
Michael job Memorial College of Education for Women,
Near Sulur Boat Lake, Ravathur Post, Sulur, Coimbatore,
Tamil Nadu, INDIA 641103
uniravi@gmail.com

**To cite this article (APA):** Rajandran, N., Pal Thamburaj, K., & Ravi, R. (2022). மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பு.: Correlation Between Reading Habit and Reading Skill Among Students. *Journal of Valartamil*, *3*(2), 34–46. https://doi.org/10.37134/jvt.vol3.2.4.2022

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol3.2.4.2022

**Abstract**: This study was carried out with the topic of correlation between reading habit and reading skill among students. The purpose of this study is to find out the cause of poor reading skill among students and to investigate the correlation between reading habits and reading skill among students. This study has been conducted qualitatively. This study found that there is a correlation between reading habits and reading skill. They could only be learned through the interview process conducted among the students. The study found that increasing reading habits will increase reading skills. By reading this study, readers will get an insight into the relationship between reading habits and reading skill.

**Keywords:** Reading habit, Reading skill, Correlation, Schema

**ஆய்வுச் சுருக்கம்:** மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பு என்ற தலைப்பைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களிடையே காணப்படும் வாசிப்புத் திறன் குன்றியிருப்பதற்கான காரணத்தைக் கண்டறிதல் மற்றும் மாணவர்களிடையே காணப்படும் வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பினை ஆராய்தல் இவ்வாய்வின் நோக்கமாகக் கருதப்படுகிறது. இந்த ஆய்வு பண்புசார் முறையில் கையாளப்பட்டுள்ளது. வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் தொடர்பு உள்ளது என

இவ்வாய்வின் வழி கண்டுபிடிக்கப்பட்டது. அவை மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மட்டும் நடவடிக்கையின்வழி அறிய முடிந்தது. வாசிப்புப் பழக்கம் அதிகரிக்க வாசிப்புத் திறனும் அதிகரிக்கும் என்ற கருத்து ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆய்வை வாசிப்பதன் மூலம் வாசகர்களுக்கு வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிறகும் உள்ள தொடர்பு பற்றிய விளிப்புணர்வு கிட்டும்.

**கருச்சொற்கள்:** வாசிப்புப் பழக்கம், வாசிப்புத் திறன், தொடர்பு, ஸ்கீமா

## முன்னுரை

வாசிப்புப் பழக்கம் என்பது அவசியம் அனைவருக்கும் இருக்க வேண்டிய ஒன்றாகும். வாசிப்பு என்பது சிந்தனை, மதிப்பீடு, தீர்ப்பு, கற்பனை, பகுத்தறிவு மற்றும் சிக்கலைத் தீர்ப்பது (பழனி, 2012). வாசிப்புப் பழக்கத்தை ஒரு பொழுதுபோக்காக. மட்டும் நோக்காமல் வாழ்வியலோடு தொடர்புபடுகின்ற ஒன்றாக நோக்க வேண்டும். ஒரு நபரின் வளர்ச்சிக்கும் ஒரு நல்ல வாசிப்பு முக்கியம். மேலும், விவரமான கல்வி மற்றும் ஒரு நபரின் வளர்ச்சிக்கு வாசிப்பு பெரும் பங்காற்றுகிறது. (adeyinka tella, 2007). இப்பழக்கமானது அதிகரிக்க நாம் பல திறன்களை நாளடைவில் மேம்படுத்திக் கொள்ளலாம். அதில் ஒன்றுதான் வாசிப்புத் திறன். அதுவும் இவை மாணவர்களின் மத்தியில் பல விளைவுகளை உண்டாக்குகின்றன. ஒரு சிறந்த கற்றல் செயல்பாட்டில், வாசிக்கும் திறன் என்பது அதீத முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மாணவர்கள் சிறப்பான வாசித்தல் திறனை வளர்த்துக் கொள்வதென்பது, அது அவர்களின் வாசிக்கும் பழக்கத்தின் ஆர்வம் பொறுத்தது என்பது மறக்கலாகாது. இக்கூற்றே இவ்வாய்வில் பெரிதும் கருத்தில் கொண்டு ஆராயப்பட்ட ஒன்றாக உள்ளது. அதாவது மாணவர்களிடையே உள்ள வாசிப்புப் பழக்கத்திற்கும் அவர்களின் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பினை ஆராயும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

## ஆய்வின் பின்னணி

வாசிப்பு என்பது பள்ளிகளில் கற்பிக்கப்படும் மிக முக்கியமான திறன் ஆகும். ஆனால், இன்றைய மாணவர்களிடத்தில் வாசிக்கும் பழக்கமானது குறைந்தே உள்ளது. எப்பொழுது மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் மேம்படுகிறதோ அப்பொழுதான் மாணவர்களின் வாசிப்புத் திறனும் மேம்படும் (காலின்ஸ், 2002). சில மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை முறையே பின்பற்றுவார்கள். ஆனால் அதை தொடர்ச்சியாக அமல்படுத்துவதில்லை. மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தை ஒரு பயிற்சியாக

மேற்கொள்ளாமல் தேர்வுகளுக்குப் பயன்படுத்தும் ஒன்றாக பார்க்கின்றனர். மேலும் இன்னும் சில மாணவர்கள், பள்ளிகளில் கொடுக்கப்படும் வாசிப்பு பயிற்சியைத் தவிர்த்து மற்ற நேரங்களின் வாசிப்பின் மேல் அக்கறைக் கொள்வதில்லை (சுப்பு ரெட்டியார், 2008). அதன் அடிப்படையில் பார்த்தால், அதிக வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் சிறந்த வாசிப்புத் திறனுடனும், குறைந்த வாசிப்புத் பழக்கம் உள்ள மாணவர்கள் குறைவான வாசிப்புத் திறனுடயவர்களாகத் திகழ்வார்கள் என்பதே மேலோட்டமான கருத்தாகும்.

## ஆய்வு சிக்கல்

இன்றைய சூழலில் தொடக்கப் பள்ளி மாணவர்களாயினும் இடைநிலைப்பள்ளி மாணவர்களாயினும் சரி பெரும்பாலான மாணவர்களிடத்தில் வாசிப்பு திறன்கள் மிகவும் குன்றிப் போய் கிடக்கின்றன. காரணம் பள்ளிகளில் பாட புத்தகத்தில் உள்ளதை வாசிப்பதைத் தவிர, மற்ற நேரங்களில் வாசிக்கும் பழக்கமானது மாணவர்களிடத்தில் மிகவும் குறைவு. மேலும் வாசிப்புத் திறன்களிலும் சில மாணவர்கள் பின்தங்கியே உள்ளனர். குறிப்பிட்ட ஒரு பனுவலையோ பத்திகளையோ வாசிக்கும் மாணவர்களின் வாசிப்பில் உச்சரிப்புப் பிழைகள் நிறைந்த வண்ணம் காணப்படும்.மேலும்,சாளமின்றி வாசித்தல், ஈற்றெழுத்தை விழுங்குதல், குறில், நெடில் வேறுபாடின்றி வாசித்தல், அதிக விரைவுடன் வாசித்தல், அருஞ்சொற்கள் புரியாமைப் போன்ற மேலும் பல சிக்கல்களை வாசிக்கும் போது எதிர்நோக்குகின்றனர். மாணவர்கள் எதிர்நோக்கும் இச்சிக்கலுக்கான காரணத்தை இவ்வாய்வில் கண்டறியலாம். இவ்வாய்வின் வினா, மாணவர்களிடையே வாசிப்புத் திறன் குன்றியிருப்பதற்கான காரணம் என்ன? அடுத்த வினா, மாணவர்களிடையே காணப்படும் வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பு என்ன?

## ஆய்வு நோக்கம்

I. மாணவர்களிடையே காணப்படும் வாசிப்புத் திறன் குன்றியிருப்பதற்கான காரணத்தைக் கண்டறிதல்
II. மாணவர்களிடையே காணப்படும் வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பினை ஆராய்தல்

## முந்தைய ஆய்வுகள்

Saroj Datta & Michael Macdonald-RoSSL Reading Skills and Reading Habits: A study of new Open University undergraduate reservees தலைப்பில் ஆய்வு ஒன்று ஆராயப்பட்டுள்ளது. மொத்தம் 365 திறந்த பல்கலைக்கழக மாணவர்களின் வாசிப்புப் பழக்கமும் வாசிப்புத் திறனும் இவ்வாய்வில்

கணக்கெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பத்திகளை மாணவர்களிடம் கொடுத்து வாசிக்க வைத்து அவர்களின் வாசிப்புத் திறனை ஆராய்ந்து கணக்கெடுத்துள்ளனர். இவ்வாய்வின் முடிவாக அதிக வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் அதாவது புத்தகங்கள், பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை அதிகம் வாசிப்பவர்களின் வாசிப்புத் திறன்கள் அதிகமாகவும், குறைந்த வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்களிடத்தில் தெளிவான சொற்கள் உச்சரிப்பு, மேலும் வாசிப்புத் திறன் கூறுகள் அனைத்தும் மிகக் குறைவாகவே காணப்பட்டன என்பதை ஆய்வு விவரித்துள்ளது. அடுத்த ஆய்வாக, Ravi Sheorey என்பவரால் The Reading Habit of Developmental College students at different Levels of Reading Proficiency எனும் தலைப்பில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு கல்லூரி மாணவர்களிடையே உள்ள பல தரப்பட்ட வாசிப்புப் பழக்கத்தினையும், அதன் அடிப்படையில் அவர்களின் வாசிப்புப் திறனின் நிலைகளையும் ஆராய்பவையாக உள்ளது. இவ்வாய்வின் முடிவில் மாணவர்களின் வாசிப்புத் திறனானது பல நிலைகளில் உள்ளதைக் காண முடிகிறது. கல்வி சார்ந்த புத்தகங்களையும், கையேடுகளையும் வாசிக்கும் மாணவர்களின் வாசிப்புத் திறன் கல்விசாரா புத்தகங்கள், இதழ்கள் வாசிப்பவர்களின் வாசிப்புத் திறனை விட ஒரு மடங்கு அதிகம் உள்ளதை ஆய்வு காண்பிக்கிறது. அடுத்த ஆய்வாக, Brian Tracy GT CORRELATION BETWEEN READING HABIT AND READING COMPREHENSION, READING SKILL ACHIEVEMENT OF ENGLISH DEPARTMENT STUDENTS OF IAIN PALANGKA RAYA. இந்த ஆய்வின் முடிவில் ஆய்வாளர் வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புதிறன் மற்றும் வாசித்துப் புரிந்து கொள்ளுதளுக்கும் தொடர்பு உள்ளதைக் காட்டியிருப்பர். வாசிப்புப் பழக்கமும் வாசிப்புத் திறன்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்பதை இவ்வாய்வு பெரிது வழியுறுத்தும்.வாசிப்புப் பழக்கம் அதிகமானால் அதன் திறனும் அதிகரிக்கும், வாசிப்புப் பழக்கம் குறையுமேயானால் அதன் தாக்கமானது சிறப்பில்லா வாசிப்புத் திறனில் வந்து முடியும் என்கிறது இவ்வாய்வு.

## ஆய்வு வடிவமைப்பு

ஆய்வு வடிவமைப்பானது ஓர் ஆய்வுக்குத் திட்டமிடலாகவும் அதனை வழி நடத்தும் வழிகாட்டியாகவும் அமைகிறது. இந்த ஆய்வில் மீட்டுணர்தல், திட்டமிடுதல், செயல்படுத்துதல் ஆகிய சுழற்சிகளைப் பின்பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலில், மாணவர்கள் தாங்கள் வாசிப்பதைப் புரிந்துகொள்ளத் தடுக்கும் பொதுவான வாசிப்பு சிக்கல்கள் மீட்டுணரப்பட்டது. பின், திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. இறுதியாக, செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் விளைப்பயன் உற்றுநோக்கப்பட்டது. மேலும், இந்த ஆய்வில் பண்புசார்முறை கையாளப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்களிடையே வாசிக்கும்


பழக்கம் குன்றி கிடப்பதை நேர்காணலின் வழி அறியப்பட்டது. மாணவர்களிடையே வாசிக்கும் திறன் எந்த அளவில் உள்ளது என்பதனை அறிய நடவடிக்கைகள் நடத்தப்பட்டது. அதன் முடிவுகள் அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடையே வாசிப்புத் திறன் குன்றி காணப்படுவதை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் அறிய முடிந்தது. பின், நேர்காணலில் கிடைக்கப்பெற்ற தகவல்களையும் நடவடிக்கைகளின் முடிவுகளையும் ஒப்பிட்டு மாணவர்களிடையே வாசிப்புத் திறன் குன்றியிருப்பதற்கான காரணங்களையும் மேலும் வாசிப்பு பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பை அறிய முடிந்தது. இதனை மேற்கொள்ள பண்புசார் பயன்படுத்தப்பட்டது.

**ஆய்வுக் கோட்பாடு**

இவ்வாய்வு ஸ்கீமா கோட்பாடைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. ஸ்கீமா என்பது உளவியல் மற்றும் அறிவாற்றல் அறிவியலில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். இது ஒரு முறையான சிந்தனை வடிவத்தை விவரிக்கிறது. 1781 ஆம் ஆண்டில், கான்ட் இம்மானெல் “ஸ்கீமா" என்ற வார்த்தையை முன்மொழிந்தார். அவர் அதை பிரேம் ஸ்கிரிப்ட் அல்லது பின்னணி அறிவு என்று வரையுறுத்துகிறார் (க்ராம்ஷ்.1993) "ஸ்கீமா" என்ற சொல் கடந்தகால எதிர்வினை அல்லது கடந்த கால அனுபவத்தின் செயலில் உள்ள அமைப்பு(பார்ட்லெட், 1932). 'ஸ்கீமா' முன்பு பெற்ற அறிவு என்று அழைக்கப்படுகிறது. ஸ்கீமா மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. மொழியியல் திட்டம் (linguistic schema), உள்ளடக்கத் திட்டம் (content schema) மற்றும் முறையான திட்டம் (formal schema). (கேரல், 1984). மொழியியல் திட்டம் (linguistic schema) என்பது வாசகர்களின் முந்தைய மொழியியல் அறிவைக் குறிக்கிறது. அதாவது வாசிப்பில் அவர் முன்பு பெற்ற அறிவை வைத்துதான் அவரது வாசிப்புத் திறளின் தரம் அடையாளங்காணப்படும். இதில் ஒலிப்பு பற்றிய அறிவு உட்பட, இலக்கணம் மற்றும் சொல்லகராதி இதில் அடங்கும். உள்ளடக்கத் திட்டம் (content schema) என்பது ஒரு கட்டுரை அல்லது ஒரு தலைப்புத் தொடர்பான பின்னணி அறிவு என்பதாகும் (கோல், 1988). குறைந்த மொழி புலமை கொண்ட மாணவர்களுக்கு, உள்ளடக்கத் திட்டம் மிகவும் முக்கியமானதாகும். இது ஒருவரின் வாசிப்பு பழக்கத்தை உள்ளடக்கியதாக அமையும். ஒரு தலைப்பினைப் பற்றிய பின்னணி அறிவு ஒருவரிடம் அதிகம் இருந்தால் அத்தலைப்பு தொடர்பான வேறு பனுவலை அவர் வாசிக்கும் போது அது அவருக் எளிதில் புரியும். முறையான ஸ்கீமா (formal schema) என்பது பல்வேறு வகையான உரைகளின் மொழி, மரபுகள் மற்றும் சொல்லாட்சிக் கட்டமைப்புகள் குறித்த வாசகரின் அறிவைக் குறிக்கிறது. முறையான திட்டமானது ஆர்த்தோகிராபி, தொடரியல், ஒத்திசைவு மற்றும் உரை அமைப்பை உள்ளடக்கியது.

*மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பு.*

**ஆய்வுக் கோட்பாடு வரைப்படம்**




**ஆய்வுக் கருவிகள்**

இந்த ஆய்வில் நேர்காணல் மற்றும் வாசிப்பு நடவடிக்கைகள் ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தி இந்த ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதுவே இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட கருவிகள்.

**ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்**

ஆய்விற்கு உட்பட்டோர் என்று பார்த்தால் பேராக் மாநிலத்தில் தெலுக் இந்தானில் உள்ள ஓர் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் எட்டு மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாகப் பங்கேற்றனர். படிவம் மூன்றில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். படிவம் மூன்றில் மொத்தம் 18 இந்திய மாணவர்கள் இப்பள்ளியில் பயில்கின்றனர். அவர்களில் தமிழ்மொழியைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மொத்தம் 8 ஆகும். இந்த எட்டு மாணவர்களைக் கொண்டுதான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**தரவுகள் திரட்டும் முறை**

ஆய்வுத் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க நடவடிக்கைகள், நேர்காணல் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் மாணவர்களின் வாசிக்கும் திறன், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வழி கண்டறியப்பட்டது. அடுத்து, நடவடிக்கைகளின்வழி தரவுகள் சேகரிக்கப்பட்டது. 3 படிநிலையிலான கட்டுரைகள் நடவடிக்கைக்காக தயார் செய்யப்பட்டது. நடவடிக்கைகளில் மாணவர்கள் அக்கட்டுரைகளை

வாசிப்பதன் மூலம் அவர்களது வாசிப்புத் திறனிற்கான புள்ளிகள் கணக்கிடப்பட்டது. அதன்பின், நேர்காணலின் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டது. மாணவர்களிடையே உள்ள வாசிப்புப் பழக்கத்தை கண்டறிய அவர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மாதத்தில் அவர்கள் வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை நேர்காணலின் மூலம் பதிவு செய்யப்பட்டது. இறுதியாக, ஆய்வின் நோக்கம் நிறைவேறியுள்ளதா என்ற தரவை அதாவது வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் தொடர்பு உள்ளதா என்பதை நடவடிக்கையில் கணக்கிடப்பட்ட புள்ளிகள் மற்றும் நேர்காணலின் முடிவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தெரிந்துக் கொள்ளப்பட்டது. ஆகவே, மாணவர்களுக்கு மூன்று படிநிலையில் அமைந்த கட்டுரையைக் கொடுத்து வாசிக்கப் பணிக்கப்பட்டது. இதன் மூலம் இறுதி தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**தரவுகள் பகுப்பாயும் முறை**

முதலில் மொத்தம் 8 மாணவர்களிடத்தில் அவர்கள் ஒரு மாத காலத்தில் வாசித்த தமிழ் புத்தகங்களின் எண்ணிக்கையைக் கண்டறிய நேர்காணல் ஒன்று மேற்கொள்ளப்படும். இந்நேர்காணலின் வழி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தையும் வாசிப்பின் மேல் அவர்களுக்கு உள்ள ஆர்வமும் கண்டறியப்படும். கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை ஒன்றில் அம்முடிவுகள் குறித்து வைத்துக் கொள்ளப்படும்.

| மாணவர்கள் | வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை (ஒரு மாதம்) |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |

**அட்டவணை 1:** வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை

அடுத்து அந்த 8 மாணவர்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடவடிக்கையில் 3 பக்கம் அளவிலான வெவ்வேறு தரத்தில் உள்ள கட்டுரை மாணவர்களுக்கு வழங்கப்படும். அதாவது கடினமான, நடுநிலையான

சுலபமான தரத்தில் அடங்கிய கட்டுரைகள் ஆகும். ஒவ்வொரு தரத்தில் அமைந்த கட்டுரைக்கும் 20 புள்ளிகள் ஒதுக்கப்படும். அவை வேகம்(5 புள்ளி), தொனி (5 புள்ளி), உச்சரிப்பு(5 புள்ளி) மற்றும் மாணவர்களின் வாசிப்பு ஆர்வம்(5 புள்ளி) போன்ற அடிப்படையில் மதிப்பிடப்படும். ஆக மொத்தம் மூன்று தரத்தில் அமைந்த மொத்த புள்ளிகள் 60 என வகுக்கப்படும். வாசிப்பு நடவடிக்கையின் இறுதியில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்படும்.

| மாணவர்கள் / நடவடிக்கைகள் (கட்டுரை வாசிப்பு) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கடினம் | | | | | | | | |
| நடுநிலை | | | | | | | | |
| சுலபம் | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

**அட்டவணை 2:** மாணவர்கள் கட்டுரை நடவடிக்கையில் பெற்ற புள்ளிகள்

இறுதியாக, நேர்காணல் மற்றும் வாசிப்பு நடவடிக்கையில் கிடைக்கப்பெற்ற தரவுகள் இரண்டும் அட்டவணையில் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். மாணவர்கள் வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கையையும், அவர்கள் வாசிப்பு நடவடிக்கையில் பெற்ற புள்ளிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், அவர்களிடையே வாசிப்புத் திறன் குன்றியிருப்பதற்கான காரணத்தையும், வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பினையும் அராய்ந்து பார்க்க முடியும். அவை கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையின் மூலம் ஒப்பிட்டு காண்பிக்கப்படும்.

**நேர்காணல் மற்றும் நடவடிக்கையின் ஒப்பீடு**

| மாணவர்கள் | வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை (வாசிப்புப் பழக்கம்) | வாசிப்பு நடவடிக்கையில் பெற்ற புள்ளிகள் (60) |
|---|---|---|
| **1** | | |
| **2** | | |

| | | |
|---|---|---|
| **3** | | |
| **4** | | |
| **5** | | |
| **6** | | |
| **7** | | |
| **8** | | |

**அட்டவணை 3:** நேர்காணல் மற்றும் நடவடிக்கையின் ஒப்பீடு

**ஆய்வு முடிவுகள்**

நடவடிக்கைகளின் இறுதியில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளானது இவ்வாசிப்புத் திறன் கூறுகளைக் கொண்டு அமைந்தது.

| | |
|---|---|
| **வேகம்** | நிறுத்தற்குறிகள் அறிந்து சரியான வேகத்துடன் நிருத்தி நிதானமாக வாசித்தல் |
| **தொனி** | நல்ல தொனியுடன் குறில் நெடில்களை வித்தியாசப்படுத்தி, ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல் |
| **உச்சரிப்பு** | ‘ரகர’ ‘ழகர’ சொற்களை உச்சரித்தல் |

**அ) நேர்காணல்**

மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் வழி குறிப்பிட்ட 8 மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அவர்கள் ஒரு மாத காலத்தில் வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை வழி தீர்மானிக்க முடிந்தது. முதலாம் மாணவர் ஒரு மாத காலத்தில் 5 புத்தகங்களையும், இரண்டாம் மாணவர் 3 புத்தகங்களையும், மூன்றாம் மாணவர் 6 புத்தகங்களையும், நான்காம் மாணவர் 8 புத்தகங்களையும், ஐந்தாம் மாணவர் 2 புத்தகங்களையும், ஆறாம் மாணவர் 2 புத்தகங்களையும், ஏழாம் மாணவர் அதிகமான 10 புத்தகங்களையும், எட்டாம் மாணவர் 3 புத்தகங்களையும் வாசித்திருப்பதாக தெரிய வந்துள்ளது. இதில் அதிகமான புத்தகத்தை ஏழாம் மாணவரும், மிகக் குறைவான புத்தகத்தை ஐந்து மற்றும் ஆறாம் நபரும் படித்துள்ளதை அட்டவணையில் காண முடியும்.

| மாணவர்கள் | வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை (ஒரு மாதம்) |
|---|---|
| 1 | 5 |
| 2 | 3 |
| 3 | 6 |
| 4 | 8 |
| 5 | 2 |
| 6 | 2 |
| 7 | 10 |
| 8 | 3 |

**அட்டவணை 1:** வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை

**ஆ) நடவடிக்கை**

நடவடிக்கையில் 3 பக்கம் அளவிலான வெவ்வேறு தரத்தில் உள்ள கட்டுரை மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. அதாவது கடினமான, நடுநிலையான சுலபமான தரத்தில் அடங்கியவை ஆகும். ஒவ்வொரு தாத்தில் அமைந்த கட்டுரைக்கும் 20 புள்ளிகள் ஒதுக்கப்பட்டன. அவை வேகம்(5 புள்ளி), தொனி(5 புள்ளி), உச்சரிப்பு (5 புள்ளி) மற்றும் மாணவர்களின் வாசிப்பு ஆர்வம்(5 புள்ளி) போன்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. ஆக மொத்தம் மூன்று தரத்தில் அமைந்த கட்டுரைகளுக்கென ஒதுக்கப்பட்ட மொத்த புள்ளிகள் 60 ஆகும். முதல் மாணவர் மொத்தம் 40 புள்ளிகளும், இரண்டாம் மாணவர் 24 புள்ளிகளும், மூன்றாம் மாணவர் 44 புள்ளிகளும், நான்காம் மாணவர் 48 புள்ளிகளும், ஐந்தாம் மாணவர் 18 புள்ளிகளும், ஆறாம் மாணவர் 18 புள்ளிகளும், ஏழாம் மாணவர் 53 புள்ளிகளும், எட்டாம் மாணவர் 24 புள்ளிகளும் பெற்றனர்.

| மாணவர்கள் / நடவடிக்கைகள் (கட்டுரை வாசிப்பு) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கடினம் | 13 | 14 | 16 | 6 | 6 | 17 | 17 | 8 |
| நடுநிலை | 13 | 8 | 15 | 16 | 6 | 17 | 17 | 8 |
| சுலபம் | 14 | 8 | 15 | 16 | 6 | 6 | 19 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 40 | 24 | 44 | 48 | 18 | 18 | 53 | 24 |

**அட்டவணை 2:** மாணவர்கள் சிறுகதை நடவடிக்கையில் பெற்ற புள்ளிகள்


**நேர்காணல் மற்றும் நடவடிக்கையின் ஒப்பீடு**

| மாணவர்கள் | வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை (வாசிப்புப் பழக்கம்) | வாசிப்பு நடவடிக்கையில் பெற்ற புள்ளிகள் (60) |
|---|---|---|
| **1** | **5** | **40** |
| **2** | **3** | **24** |
| **3** | **6** | **44** |
| **4** | **8** | **48** |
| **5** | **2** ↓ | **18** ↓ |
| **6** | **2** | **18** |
| **7** | **10** ↑ | **53** ↑ |
| **8** | **3** | **24** |

**அட்டவணை 3:** நேர்காணல் மற்றும் நடவடிக்கையின் ஒப்பீடு

மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் அதிக புத்தகங்களை வாசித்த அதாவது அதிக வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர் வாசிப்புத் திறன் நடவடிக்கையில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளதையும், மிகக் குறைவான புத்தகங்களை வாசித்த அதாவது குறைவான வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் குறைவான மதிப்பெண் பெற்றுள்ளதையும் விளக்கப்படம் மூலம் ஒப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆக இதன் மூலம் வாசிப்பு பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் தொடர்பு உள்ளதைத் காண முடிகிறது. அதாவது அதிக வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் அதிக வாசிப்புத் திறனுடனும், குறைவான வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் குறைவான வாசிப்புத் திறனுடனும் இருப்பதைக் காண முடிகிறது.

**ஆய்வு முடிவுகள் கலந்துரையாடல்**




மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் அதிக புத்தகங்களை வாசித்த அதாவது அதிக வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர் வாசிப்புத் திறன் நடவடிக்கையில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளதையும், மிகக் குறைவான புத்தகங்களை வாசித்த அதாவது குறைவான வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் குறைவான மதிப்பெண் பெற்றுள்ளதையும் விளக்கப்படம் மூலம் ஒப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆக இதன் மூலம் வாசிப்பு பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் தொடர்பு உள்ளதைத் காண முடிகிறது. அதாவது அதிக வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் அதிக வாசிப்புத் திறனுடனும், குறைவான வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவர்கள் குறைவான வாசிப்புத் திறனுடனும் இருப்பதைக் காண முடிகிறது.

**ஆய்வுப் பரிந்துரைகள்**

இந்த ஆய்வினை பற்ற பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களும் தங்களுடைய கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் இந்த அனுகுமுறையை மேற்கொண்டால் மாணவர்களிடத்தில் வாசிக்கும் திறன் அதிகரிக்கும். மேலும், இந்த அணுகுமுறையைக் கொண்டு மாணவர்களின் வாசிக்கும் பழக்கத்தையும் மேம்படுத்தலாம். வாசிப்புப் பழக்கத்தின் வழி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தலாம் என்ற தலைப்பில் வேறொரு புதிய ஆய்வினை மேற்கொள்ளலாம். மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தின் அவசியமும் அதில் அடங்கியுள்ள மிக முக்கியமான நன்மையாகிய வாசிப்புத் திறன் மேம்பாட்டைப் பற்றிய விளிப்புணர்வு உண்டாகிவிட்டால், மாணவர்கள் தங்களது வாசிப்புத் திறனை மேம்படுத்திக்கொள்ள நிச்சயம் வாசிப்பு பழக்கங்களில் கூடுதல் கவனம் செலுத்துவர். இதன் மூலம் அவர்களிடையே ஒரு நல்ல வாசிப்புத் திறன் உருவாகும்; மேம்படுத்தப்படும். மேலும் வாசிப்புப் பழக்கத்திற்கும் வேசிப்புத் திறானிற்கும் மிகப்பெரிய தொடர்பு உள்ளதை

அவர்களும் அறிவர். இந்த ஆய்வானது எட்டு மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது. இனிவரும் தொடர் ஆய்வுகளில் அதிகமான மாணவர்களை உட்படுத்தி ஆய்வினை மேற்கொள்ளலாம். இதன்வழி, வாசிப்புத் திறன் குன்றி இருக்கும் அதிகமான மாணவர்கள் மேம்படுத்தப்படுவர். தொடர் ஆய்வுகளில், அனைத்துப் படிவ மாணவர்களையும் உட்படுத்தி ஆய்வினை மேற்கொள்ளலாம் இந்த ஆய்வில் வாசிப்புப் பழக்கம் அதிகரித்தால் வாசிப்புத் திறனும் அதிகரிக்கும் என்ற கொள்கையைக் கையாண்டு ஆய்வாளர் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். தொடர் ஆய்வுகளில் வேறொரு அணுகுமுறைகள் அல்லது கொள்கைகளையும் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளலாம்.

## துணைநூற்பட்டியல்

Xiaoguang Zhao, Schema Theory and College English Reading Teaching, University of Jinan, China 2012. https://files.eric.ed.gov/fulltext/EJ 1080109.pdf

INDRIANI, CORRELATION BETWEEN READING HABIT AND READING COMPREHENSION ACHIEVEMENT OF ENGLISH DEPARTMENT, 2019. http://digilib.iain-palangkaraya.ac.id/2326/1/Skripsi%20Indriani-1501121065.pdf

Nurul Afifah. THE CORRELATION BETWEEN STUDENTS' READING HABIT AND THEIR READING COMPREHENSION, 2020 http://repository.radenintan.ac.id/9679/1/pusat.pdf

Christopher Pappas, (2014) Instructional Design Models and Theories: Schema Theory https://elearningindustry.com/schema-theory

Ravi sheorey, THE READING HABITS OF DEVELOPMENTAL COLLEGE STUDENTS AT DIFFERENT LEVELS OF READING PROFICIENCY, 2013 https://www.researchgate.net/publication/234725314 The Reading Habits of Developmental College Students at Different Levels of Reading Proficiency

The Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH), 2021

Scetha Lakshimi. (2010). *Teaching Tamil language interesting (தமிழ் மொழி கற்றல் கற்பித்தலைச் சுவை மிக்கதாக்குவோம்).* Pasumpon Publication, Singapore